# யாழ்ப்பாண அரசுகாலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த வரி முறைகள்: ஒரு வரலாற்றுப் பார்வை

**ஜெயதீஸ்வரன் க.**[99]

**ஆய்வுச் சுருக்கம்**

நாகதீபப் பண்பாட்டு அடித்தளத்திலிருந்து கி.பி 13 ஆம் நூற்றாண்டில் மலர்ந்திருந்த யாழ்ப்பாண அரசானது மத்தியகால இலங்கை வரலாற்றில் சுதந்திர அரசாக விளங்கியிருந்தது. இவ்வரசு யாழ்ப்பாணப் பகுதியை மையப்படுத்தியவகையில் தோற்றம்பெற்றிருந்ததனால் யாழ்ப்பாண அரசு என்ற பெயரைப் பெற்றிருந்ததுடன் இது யாழ்ப்பாணப் பட்டணம் அதனைச் சுற்றியிருந்த தீவுகள், வன்னியின் சில பகுதிகள், மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளை உள்ளடக்கியவகையில் யாழ்ப்பாண இராச்சியம் என்ற பெயரைப் பெற்றிருந்தது. இவ்வாறு விளங்கியிருந்த யாழ்ப்பாண அரசானது 17 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வீழ்ச்சியடையும்வரை அரசியல், பொருளாதார, சமூக பண்பாட்டு நிலைகளில் எழுச்சிமிக்க அரசாக விளங்கியிருந்தது. இவ்வாறு, தோற்றம் பெற்றது முதல் வீழ்ச்சியடையும் வரை யாழ்ப்பாண அரசு எழுச்சிமிக்க அரசாக விளங்கியதற்கு மூலகாரணம் ஆட்சியாளர்களது சிறந்த அரசியல் நடவடிக்கைகளும், அதற்கு உறுதுணையாக இருந்த பொருளாதார வளங்களும் அதனைச் சிறப்பானவகையில் முன்னெடுத்துச் செல்வதற்காக ஆட்சியாளர்கள் வகுத்திருந்த சிறந்த பொருளாதாரக் கொள்கைகளும் ஆகும். இப்பொருளாதாரக் கொள்கைகள் யாழ்ப்பாண அரசிற்குப் பெருமளவு வருமானத்தைப் பெற்றுக் கொடுத்து யாழ்ப்பாண அரசு பொருளாதார ரீதியில் எழுச்சிமிக்க அரசாக விளங்குவதற்கு வழியமைத்திருந்தது. இவ்வாறு, யாழ்ப்பாண அரசர்கள் பின்பற்றிவந்த பொருளாதாரக் கொள்கைகளில் அரசிற்கு வருமானத்தைப் பெறும் நோக்கில் பல்வேறு வரிகளை நடைமுறைப்படுத்தி அதனை அறவிடுவதற்கென பல அதிகாரிகளை நியமித்து அவற்றைப் பெற்றுவந்தனர். இவ்வாறான வருமானங்களால் யாழ்ப்பாண அரசிற்கு வருமானம் கிடைத்துவந்த அதேவேளை யாழ்ப்பாண அரசு பணப்பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட அரசு என்ற சிறப்பைப் பெற்றிருந்தது. யாழ்ப்பாண அரசிற்கு வரி மூலமான வருமானங்கள் தவிர இராச்சியத்தில் காணப்பட்ட இயற்கை வளங்களை அடிப்படையாகக்கொண்டு, முன்னெடுக்கப்பட்டுவந்த பல்வேறு தொழில்கள் மூலமாகவும் வருமானங்கள் கிடைத்துவந்தாலும் இவ்வரசு சுதந்திர அரசு என்பதற்கேற்ப தனக்கென தனித்துவமான வருமான மூலங்களாக பல வரிகளை நடைமுறைப்படுத்தி அறவிட்டு வந்தமையானது இடைக்கால இலங்கை வரலாற்றில் அதன் சிறப்பைப் பறைசாற்றி நிற்கின்றது.

**பிரதான சொற்கள்:** அரசு, இராச்சியம், விற்பனை, பொருளாதாரம்

## ஆய்வு அறிமுகம்

மத்தியகால இலங்கை வரலாற்றில் வடபகுதியில் தோற்றம் பெற்றிருந்த சுதந்திர அரசாக யாழ்ப்பாண அரசு விளங்கியிருந்தது. இவ் அரசு கி.பி 13 ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றது முதல் கி.பி 17 ஆம் நூற்றாண்டில் வீழ்ச்சியடையும்வரை அரசியல், பொருளாதார, சமூக பண்பாட்டு நிலைகளில் எழுச்சிமிக்க அரசாகக் காணப்பட்டது(இந்திரபாலா,1972ப.61). யாழ்ப்பாண அரசு எழுச்சிமிக்க அரசாக விளங்கியதற்கு மூலகாரணம் அதன் ஆட்சியாளர்களது நடவடிக்கைகளும் அதற்கு அடித்தளமாக விளங்கிவந்த பொருளாதார வளங்களும் அவற்றை சிறப்பானவகையில் முன்னெடுத்துச் செல்லும்நோக்கில் பின்பற்றிவந்த பொருளாதாரக் கொள்கைகளும் ஆகும். யாழ்ப்பாண அரசைப் பொறுத்தவரை இவ் அரசு இராச்சியத்தின் பல பகுதிகளிலும் காணப்பட்ட இயற்கை வளங்கள், அவற்றை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டுவந்த பல்வேறு தொழில்கள் மற்றும் வர்த்தக நடவடிக்கைகள், தென்னிலங்கை அரசுகளிடமிருந்து பெற்றுவந்த திறைகள் என்பன மூலம் வருமானங்களைப் பெற்று பொருளாதாரரீதியில் எழுச்சிமிக்க அரசாக விளங்கியிருந்தது. இதேவேளை யாழ்ப்பாண அரசர்கள் தமக்கென தனித்துவமான பொருளாதாரக் கொள்கைகளை வகுத்து அவற்றின் மூலம் வருமானங்களைப் பெற்று பொருளாதாரரீதியில் யாழ்ப்பாண அரசு வலிமைமிக்கதாக விளங்க வழியமைத்திருந்தனர். இவர்கள் அமைத்திருந்த பொருளாதாரக் கொள்கைகளில் அரசுக்கான வருமானங்களை பெற்றுக்கொடுப்பதில் இவர்கள் பின்பற்றிவந்த வரிமுறைகள் முக்கிய பங்கு வகித்திருந்தன. இவ்வாறான வரிகளை அறவிடுவதற்கென பல அதிகாரிகளை நியமித்திருந்தனர். இவ்வாறு அறவிடப்பட்டுவந்த வரிகளில் பெருமளவானவை பணமாக அறவிடப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. இந்தவகையில் யாழ்ப்பாண அரசர்கள் பல்வேறு வழிகளுடாக வருமானங்களைப் பெற்று யாழ்ப்பாண அரசு பொருளாதாரரீதியில் எழுச்சிமிக்க அரசாக விளங்க

To whom correspondence should be addressed: jeyathe@gmail.com

[99] Lecturer, Department of History, University of Peradeniya.

வழியமைத்திருந்தனர். இவ் வருமானங்களில் வரி மூலமான வருமானம் முக்கிய பங்குவகித்திருந்தமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

**இலக்கிய மீளாய்வு**

இலங்கைவாழ் தமிழர்கள் தொடர்பாகவும் அவர்கள் வரலாற்றில் தனி அரசு தோற்றம்பெற்ற காலமான யாழ்ப்பாண அரசர் காலம் தொடர்பாகவும் அதன் பின்னர் ஏற்பட்ட ஐரோப்பியர் ஆட்சி தொடர்பாகவும் பல அறிஞ்ஞர்களால் தமிழ், ஆங்கில மொழிகளில் பல நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வகையில் இவ் ஆய்விற்கு பேருதவியாய் அமைந்த நூல்கள் தொடர்பாக குறிப்பிடும்போது பேராசிரியர் க.இந்திரபாலா அவர்களுடைய நூல்களான ''இலங்கையில் தமிழர் ஓர் இனக்குழு ஆக்கம்பெற்ற வரலாறு'',''யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம்'' ஆகியவை வடஇலங்கையின் ஆரம்பகால வரலாறு தொடர்பாகவும் யாழ்ப்பாண அரசின் தோற்றம் தொடர்பாகவும் அறிய உதவுகின்றது. செ. இராசநாயகம் எழுதிய ''யாழ்ப்பாணச் சரித்திரம்'' யாழ்ப்பாண அரசர்காலப் பொருளாதாரம் தொடர்பாக அறிவதற்கு உதவிபுரிகின்றது. செ. கிருஷ்ணராசா அவர்களது நூலான ''இலங்கைப்பண்பாட்டுப் பரிணாமத்தின் அடிப்படைகள்'' எனும் நூல் ஆரம்பகால வட இலங்கை வரலாறு தொடர்பாக அறிவதற்கு உதவியுள்ளது. மு. குணசிங்கம் அவர்களது நூலான ''இலங்கையில் தமிழர் ஒரு முழுமையான வரலாறு'' எனும் நூல் ஆரம்பம் முதல் ஐரோப்பியர் காலம் வரையான வட இலங்கை வரலாற்றை அறிவதற்கு துணைபுரிகின்றது. கு.சபாநாதன் பதிப்பித்து வெளியிட்ட மாதகல் மயில்வாகனப் புலவரது ''யாழ்ப்பாண வைபவமாலை'' யாழ்ப்பாண அரசர்காலம் தொடர்பாக அறிவதற்கு பேருதவி புரியும் மூலநூலாக பயன்படுகின்றது. சி.க.சிற்றம்பலம் பதிப்பித்து வெளியிட்ட ''யாழ்ப்பாண இராச்சியம்'' எனும் நூல் யாழ்ப்பாண அரசர்காலம் தொடர்பாக பல தகவல்களை அறியத் துணைபுரிகின்றது. சுவாமி ஞானப்பிரகாசரது ''யாழ்ப்பாண வைபவ விமர்சனம்'' எனும் நூல் யாழ்ப்பாண அரசு காலம் தொடர்பாக அறிவதற்கு உதவும் மூலநூல்களில் ஒன்றாக விளங்குகின்றது. சி. பத்மநாதன் அவர்களது நூலான '' யாழ்ப்பாண இராச்சியம் ஒரு சுருக்கவரலாறு'',''இலங்கைத்தமிழர் தேசவளமைகளும் சமூகவளமைகளும்'',''The Kingdom of Jaffna'' , ஆகியவை யாழப்பாண அரசு காலம் தொடர்பாக அரியதகவல்களை அறிவதற்கு துணைபுரிகின்றன. ப.புஸ்பரட்ணம் அவர்கள் எழுதிய ''தொல்லியல் நோக்கில் இலங்கைத்தமிழர் பண்பாடு'' எனும் நூல் ஆரம்பகாலம் முதலான வட இலங்கை வரலாற்றை தொல்லியல் நோக்கில் அறிவதற்கு துணைபுரிகின்றது. ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை எழுதிய ''யாழ்ப்பாணச் சரித்திரம்'' எனும் நூல் யாழ்ப்பாண அரசு காலம் தொடர்பாக அறிவதற்கு பெரிதும் உதவிபுரினின்றது. Tikiri Abeyasinghe அவர்களது ''Jaffna under the Portuguese'' எனும் நூல் யாழ்ப்பாண அரசு கால நிலமைகள் தொடர்பாகவும் போர்த்துக்கேயர் யாழ்ப்பாண அரசர்களது அரசியல், பொருளாதார முறைகளை தொடர்ந்து முன்னெடுத்து வந்ததன் மூலம் யாழ்ப்பாண அரசு காலம் தொடர்பாக அரிய தகவல்களை அறியத் துணைபுரிகின்றது. S.G. Perera அவர்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த போர்த்துக்கேய மதகுருவான குவைறேஸ் அவர்களது '' The Temporal and Spiritual Conquest of Ceylon'' எனும் நூல் யாழ்ப்பாண இராச்சியம் தொடர்பாக அறிவதற்கு பெரிதும் துணைபுரிகின்றது. இவ்வாறாக பல இலக்கிய ஆதாரங்களைப் பயன்படுத்தி இவ் ஆய்வுக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

**ஆய்வு முறையியல்**

முதலாம், இரண்டாம்தரத் தரவுகளை ஆதாரமாகக் கொண்டு பொருளாதார மற்றும் வரலாற்று அணுகுமுறையின் அடிப்படையில் இவ் ஆய்வானது மேற்கொள்ளப்படுகின்றது. முதலாம்தரத் தரவுகள் என்ற அடிப்படையில் யாழ்ப்பாண அரசுகாலம் தொடர்பாக எழுந்த மூல இலக்கியங்கள், தொல்லியல் ஆதாரங்களான கல்வெட்டுக்கள், நாணயங்கள் என்பன விளங்குகின்றன. இரண்டாம் தரத் தரவுகளாக முதலாம்தரத் தரவுகளைப் பயன்படுத்தி பிற்காலத்தில் எழுதப்பட்ட நூல்கள், சஞ்சிகைகள், கட்டுரைகள்

இவ்விடயம் தொடர்பாக ஆய்வினை மேற்கொண்ட ஆய்வாளர்களுடனான நேர்காணல்கள் என்பன இவ் ஆய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**ஆய்வின் நோக்கம்**

இவ் ஆய்வானது பல நோக்கங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. அந்தவகையில் யாழ்ப்பாண அரசுகாலம் தொடர்பாக பல ஆய்வாளர்கள் ஆய்வுகளை மேற்கொண்டிருந்தாலும் வரிமுறைகள் தொடர்பாக தனித்துவமானவகையில் மேற்கொள்ளாது அவற்றை தமது ஆய்வுகளில் தொட்டுச்சென்றுள்ளனர். எனவே அக்குறைபாட்டை நிவர்த்தி செய்யும் நோக்கில் இவ் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. அடுத்து சுதந்திர அரசாக விளங்கியிருந்த யாழ்ப்பாண அரசில் எவ்வாறான வரிமுறைகள் காணப்பட்டது அவற்றை எவ்வாறு அரசர்கள் அறவிட்டு வந்தனர் போன்றவற்றை வெளிக்கொணரும் நோக்குடன் இவ் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் இக்காலத்தில் அறவிடப்பட்டு வந்த வரிமுறைகளை பிற்கால சந்ததியினர் அறியவேண்டும் என்ற நோக்கில் ஆவணப்படுத்தும்வகையில் இவ் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**யாழ்ப்பாண அரசர்களது வருடாந்த வரவு செலவு அறிக்கை**

யாழ்ப்பாண அரசர்கள் பின்பற்றி வந்த வரவு செலவுத் திட்டம் தொடர்பான அறிக்கை அவர்கள் காலப்பகுதியிலிருந்து பெறமுடியவில்லையாயினும் யாழ்ப்பாண அரசை போர்த்துக்கேயர் கைப்பற்றிய பின்னர் அவர்கள் யாழ்ப்பாண அரசின் வரவு செலவை அறியும் நோக்கில் யாழ்ப்பாண அரசில் செல்வாக்குப் பெற்றுத்திகழ்ந்த முதலியார்களிடமிருந்து பெற்றுக்கொண்ட அறிக்கையின் மூலமாக அறிந்துகொள்ள முடிகின்றது. அவர்கள் வழங்கிய அறிக்கையின்படி யாழ்ப்பாண அரசின் வருடாந்த வரவு செலவு பின்வருமாறு அமைந்திருந்தது.

**அரசின் வருமானம்**

1. நிலவரி மூலமாக 9400 பர்தாக்கள்
2. தஞ்சாவூர் நாயக்கர்கள் வழங்கும் நிதி 1500 பர்தாக்கள்
3. துறைமுகம் மற்றும் கடவைகள் மூலமான வருமானம் 200 பர்தாக்கள்
4. வயல்கள் மூலமான வருமானம் 500 பர்தாக்கள்
5. பிற வரிகள் மூலம் 100 பர்தாக்கள்
6. யானை மூலமான வருமானம் வேறுபட்டமையும்.

**அரசின் செலவு**

1. அரசின் மொத்த வருமானத்தில் 2800 பர்தாக்கள் அரச அதிகாரிகளது ஊதியம் மற்றும் கோயில் பராமரிப்பிற்குச் செலவிடப்படும்.
2. திறையாக 1200 பர்தாக்கள் கொடுக்கப்படும்.
3. படையினரது ஊதியமாக 4500 பர்தாக்கள் செலவிடப்பட்டன. (Tikiri Abeyasinghe, 1986p.p28-29)

இவ்விடத்தில் யாழ்ப்பாண அரசு ஏகபோக உரிமை கொண்டு மேற்கொண்டு வந்த வர்த்தகங்களான முத்து மற்றும் சாய உற்பத்தி போன்றவற்றினூடாக பெற்றுவந்த வருமானங்கள் குறிப்பிடப்படாதுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. இவ் ஆண்டு வருமானத்தில் 60 சதவீதமும் செலவுகளில் 85 சதவீதமும் நிர்வாக சேவை, இராணுவ சேவை மற்றும் ஆலயங்கள் ஆகியவற்றுக்கு பயன்படுத்தப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

**வரி சேகரிப்பிற்காக நியமிக்கப்பட்டிருந்த அதிகாரிகள்**

யாழ்ப்பாண அரசர்கள் தமது இராச்சியத்தை நிர்வகிப்பதற்காக பல்வேறு அதிகாரிகளை நியமித்திருந்தனர். இவர்கள் அரசின் கடமைகளை அப்பகுதிகளில் நிறைவேற்றி வந்ததுடன் அரசு அறவிட்டுவந்த வரிகளை அப்பகுதிகளில் சேகரித்து அரசிற்கு செலுத்திவந்தனர். இப் பணிக்காக

நியமிக்கப்பட்டிருந்த அதிகாரிகளாக முதலியார்கள், அதிகாரிகள், பண்டாரப்பிள்ளை, கண்காணி, உடையார், தலையாரி, வன்னியனார் போன்றோர் இடம்பெற்றிருந்தனர்.

**முதலியார்**

முதலியார்கள் எனப்படுவோர் யாழ்ப்பாண அரசர்களது இராச்சிய பரிபாலனத்தில் முக்கிய பங்கு வகித்துவந்தனர். இவர்கள் அரசியல் அனுபவம் மிக்கவர்களாகவும், சமுதாயச்செல்வாக்கு உள்ளவர்களாகவும் காணப்பட்டனர். இவ்வாறு காணப்பட்ட இவர்கள் அரசுமீது விசுவாசம் கொண்டவர்களாகக் செயற்படுவதன் மூலமாக இப்பதவியை பெற்றுவந்தனர். இப்பதவியானது தென்னிந்தியாவில் சோழர், பாண்டியர் அரசுகளில் நிலவியிருந்ததை ஒத்திருந்தது. அந்தவகையில் இவர்கள் தத்தமது பகுதிகளில் இருந்து இராணுவசேவை, நிர்வாகசேவை, நீதிச்சேவை ஆகியவற்றை மேற்கொண்டு வந்தனர். இவ்வாறான சேவைகளில் ஈடுபட்டுவந்த இவர்கள் தத்தமது பகுதிகளில் வரி சேகரிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றுவந்த வேளைகளில் வரிசேகரிப்பில் ஈடுபட்டுவந்த அதிகாரிகளுக்கு உதவியளித்து வந்தனர்(பத்மநாதன்,2011,ப129). இதன் மூலமாக தத்தம் பகுதிகளில் இடம்பெற்று வந்த வரி சேகரிப்பை சிராக இடம்பெற வழிவகுத்து அரசிற்கு வருமானத்தை பெற்றுக் கொடுப்பதில் அக்கறை செலுத்திவந்த அதிகாரிகளாக இவர்கள் விளங்கியிருப்பதைக் காணமுடிகின்றது.

**அதிகாரி**

யாழ்ப்பாண அரசர்காலத்தில் காணப்பட்ட நிர்வாகப்பதவிகளில் உயர்வான பதவியாக இப்பதவி காணப்பட்டது. இவர்கள் இராச்சியத்தில் காணப்பட்ட மாகாணங்களுக்குப் பொறுப்பான அதிகாரிகளாகக் காணப்பட்டனர். இவ் அதிகாரிகள் மூலமாக மன்னர்கள் தமது ஆட்சிப்பகுதிகளை நிர்வகித்து வந்தனர். இவ்வாறான அதிகாரிகள் இருவகையானவர்களாக இருந்து தமது நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்தனர். ஒருவகையினர் பிரதேசமட்டத்திலும் மற்றைய வகுப்பினர் பிரதேசத்தில் காணப்பட்ட சமூகப்பிரிவினர் மட்டத்திலும் சேவையாற்றி வந்தனர்(இராசநாயகம்,1933). இவ் இருபகுதியிலிருந்தம் அரசுக்குக் கிடைக்கவேண்டிய வரிகள், சேவைகள் என்பவற்றை கவனித்துவந்தனர்.

**பண்டாரப்பிள்ளை**

யாழ்ப்பாண அரசர்கள் இராச்சியத்தில் சேகரிக்க வேண்டிய வரிகளை பெற்றுக் கொள்வதற்காக நியமித்திருந்த அதிகாரிகளாக இவர்கள் விளங்கினர். இவர்கள் அக்காலப்பகுதியில் நடைமுறையில் இருந்த வரிகளான நிலவரி, வாரம், தலைவரி, இனவரி, அதிகாரிவரி ஆகியவற்றை அறவிட்டு வந்ததுடன் மக்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை நடாத்துவிக்க வேண்டியவர்களாகக் காணப்பட்டனர். இவர்கள் நாட்டு மக்களிடம் வரிவசூலிப்பில் ஈடுபடும் போது அவர்கள் வரிவழங்கத் தவறும் பட்சத்தில் அவர்கள் வரிசெலுத்தும்வரை அவர்களது உடமைகளை கவர்ந்துகொள்ளும் முறையைப் பின்பற்றி வந்தனர்(பத்மநாதன்,1992,ப.113). இவ்வாறு வரிவசூலிப்பில் ஈடுபடும் பண்டாரப்பிள்ளைகளின் நியமனமானது பிரதேசத்தின் அளவிலும், பிரதேசத்தின் மக்கள் தொகையிலும் தங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

**கண்காணி**

யாழ்ப்பாண இராச்சியத்தில் வரிசேகரிப்பில் ஈடுபட்ட மற்றுமோர் அதிகாரிகளாக இவர்கள் விளங்கினர். இவர்கள் பற்றிய குறிப்புக்கள் தமிழரசர் காலத்தில் காணப்படாவிட்டாலும் போர்த்துக்கேய ஆவணங்களில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இப்பதவிப் பெயர் தென்னிந்தியச் செல்வாக்கின் மூலம் இலங்கையில் ஏற்படுத்தப்பட்டதாகக் கருதப்படுகின்றது. இப்பதவி வகித்தோர் ஊர்மட்டங்களில் இறைவரி நடவடிக்கைகளை கண்காணித்து வந்தவர்களாக விளங்கினர்(பத்மநாதன்,1992,ப.ப113-114).

**உடையார்**

இப் பதவிப் பெயரும் தென்னிந்தியச் செல்வாக்கின் மூலம் யாழ்ப்பாண இராச்சியத்திற்கு அறிமுகமாகியதாகக் கூறப்படுகின்றது. உடையார்கள் என்போர் கிராமத்தலைவரான தலையாரிக்குச் சற்று மேலான பதவிவகிக்கும் அதிகாரிகளாக விளங்கினர். இதேவேளை இவர்கள் இறைசுவதோரின்கீழ்

பணியாற்றி வந்தனர்.இவர்களது கடமைகள் இறைவரிகள் தொடர்பானவையாக இருந்தன. அந்தவகையில் தலைவரி, நிலக்கடமை, மேல்வாரம், மரவிறை போன்ற வரிகளை குடிமக்களிடமிருந்து அறவிட்டு வந்தனர். இவர்கள் மக்களிடமிருந்து வரியை அறவிடும்போது அதற்கான பற்றுச்சீட்டாக பட்டோலை வழங்கிவந்தனர். மேலும் இவர்கள் குடிமக்களிடமிருந்து அறவிட்டுவந்த வரிகளை இறைசுவதோரிடம் ஒப்படைத்து அதற்கான பற்றுச்சீட்டை பெற்று வந்தனர். வரி சேகரிப்பில் ஈடுபட்டுவந்த இவர்களது மற்றுமோர் பணியாக ஊர் காவல் கடமை விளங்கியது. ஊர்களில் இடம்பெறும் களவு. கொள்ளை போன்ற குற்றங்களை கட்டுப்படுத்தி அமைதியை நிலைநாட்டும் பொறுப்பை பெற்றிருந்தனர். நீதித்துறை சார்ந்த நடவடிக்கையின்போது உயர் அதிகாரிகளுக்கு உதவிபுரிபவர்களாகவும் விளங்கிவந்தனர்(பத்மநாதன்,2011,ப.ப134-135). இவர்கள் தொடர்பான பெருமளவு தகவல்களை ஒல்லாந்தர் காலத்து ஆவணங்களில் காணக்கூடியதாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

**தலையாரி**

யாழ்ப்பாண அரசு காலத்தில் ஊர்களுக்குப் பொறுப்பாக இருந்த தலைவர்கள் இப் பெயர் கொண்டு அழைக்கப்பட்டனர். மீனவ சமூகத்தவர்கள் வாழும் பகுதியில் தலைவர்களாக இருந்தவர்கள் பட்டங்கட்டி, அடப்பனார் என அழைக்கப்பட்டுவந்தனர். இத்தலையாரிகள் மூலமாகவே அரசின் அனைத்து நடவடிக்கைகளும் மக்கள் மத்தியில் முன்னெடுக்கப்பட்டு வந்தன. இப்பதவிப் பெயரானது பரம்பரை உரிமையாகப் பின்பற்றப்பட்டு வந்தது. இப்பதவி தந்தையிடமிருந்து மகனுக்கோ அல்லது மகனில்லாது உறவினருக்கோ கையளிக்கும் சந்தர்ப்பத்தில் அரசுக்கு குறிப்பிட்டளவு பணத்தை செலுத்தவேண்டியிருந்தது. அந்தவகையில் தந்தையிடமிருந்து மகனுக்குக் கைமாறும் போது 60 சக்கரம் காசும், மகன் இல்லாது உறவினர்க்குக் கைமாறும் போது அத்தொகை இருமடங்காகச் செலுத்தப்பட்டு வந்தது. தலையாரிகள் அரசுக்கு வழங்கும் சேவைகளுக்குப் பதிலாக அரசு நிலங்களை வழங்கிவந்தது. இவை இறையிலி நிலங்களாகக் காணப்பட்டன. இத்தலையாரிகள் ஊர்களில் ஏற்படும் தகராறுகளைத் தீர்த்துவைப்பதுடன் அரசு சார்பில் பணியாற்றும் பிற அதிகாரிகளான முதலியார்கள், பண்டாரப்பிள்ளைகள் ஆகியோர் பணிகளை மேற்கொள்வதற்கு அனுசரனை வழங்கிவந்தனர். ஊர்களின் தலைவர்கள் தலையாரிகள் என அழைக்கப்பட்ட அதேவேளை சில சாதியினரின் தலைவர்களும் இப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டதுடன் அவர்களிடமிருந்து வரி சேகரிப்பதற்கான உரிமையையும் பெற்றிருந்தனர்(Perara,1930,p54).

**வன்னியனார்**

யாழ்ப்பாண அரசு காலத்தில் வன்னிப்பகுதிகளை ஆட்சிபுரிவதற்காக நியமிக்கப்பட்டவர்களாக இவர்கள் விளங்கினர். இவர்கள் யாழ்ப்பாண அரசின் மேலாண்மையை ஏற்றுக்கொண்ட சிற்றரசர்களாக விளங்கினர் எனக் கூறலாம். இவர்கள் வன்னி நாட்டின் நிர்வாக அதிகாரிகளை நியமிக்கும் உரிமைகளையும் பெற்றிருந்தனர். இவர்களது நிர்வாகப் பிரிவுகள் மற்றும் நடைமுறைகள் யாழ்ப்பாண அரசில் காணப்பட்டவை போன்று இருந்தமை குறிப்பிடத்தக்கது. இவர்களது ஆட்சி உரிமை தலைமுறை தலைமுறையாக பின்பற்றப்பட்டு வந்தது. இவ் வன்னியர்கள் வன்னி நாட்டில் நிலவரி, வாரம், தலைவரி, இனவரி போன்றவற்றை நேரடியாக அறவிடும் உரிமையை பெற்றிருந்தனர்(பத்மநாதன்,2011,ப.ப136-138). இவ்வாறு அறவிடப்பட்டு வந்த வரிகள் மற்றும் வன்னி நாட்டில் காணப்பட்ட வளங்கள் சிலவும் யாழ்ப்பாண அரசர்களுக்கு வருடந்தோறும் வன்னியர்களால் செலுத்தப்பட்டு வந்தன.

**அறவிடப்பட்டு வந்த வரிகள்**

யாழ்ப்பாண அரசர்கள் அரசிற்கான வருமானங்களை பெறுவதற்காக இராச்சியத்தில் பல்வேறு வரிகளை அறிமுகப்படுத்தி அவற்றின் மூலமாக வருமானங்களைப் பெற்றுவந்தனர். இதற்காக இக்காலத்தில் அவர்கள் அறிமுகப்படுத்தியிருந்த வரிகளாக நிலவரி, தலைவரி, அதிகாரிவரி, இனவரி, சுங்கவரி மற்றும் விற்பனைவரி ஆகிய பல வரிகளை நடைமுறைப்படுத்தியிருந்தனர்.

**நிலவரி**

யாழ்ப்பாண அரசர்களுக்கு கிடைத்துவந்த வரி மூலமான வருமானங்களில் பெரும்பங்கு நிலத்தை அடிப்படையாகக் கொண்டு பெறப்பட்டு வந்த வரி மூலம் கிடைத்துவந்தது. நிலத்தை அடிப்படையாகக் கொண்டு அறவிடப்பட்டு வந்த வரி நிலவரி மற்றும் வாரம் என்ற பெயர்களால் அழைக்கப்பட்டு வந்தது. நிலம் வைத்திருப்போர் அதன் பெறுமதிக்கேற்ப வருடம் தோறும் செலுத்தும் பணம் நிலவரி எனப்பட்டது. வாரம் என்பது நிலத்தை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் உற்பத்திகளில் அரசின் பங்கு என்ற அர்த்தத்தைக் கொண்டிருந்தது. இது 1/10 பங்காக அறவிடப்பட்டு வந்தது. நிலவரியானது செய்கை பண்ணப்படும் பயிர்கள் மற்றும் அறுவடை ஆகியவற்றை கொண்டே தீர்மானிக்கப்பட்டது. மாதோட்டம் மற்றும் வன்னி ஆகிய பகுதிகளில் அறவிடப்பட்டு வந்த தானியவரி தீர்வை என அழைக்கப்பட்டு வந்தது. இது விதைக்கப்பட்ட அளவு தானியத்தை வரியாக அறவிடுவதாக இருந்தது(பத்மநாதன்,2001,ப.ப66-69).

நிலத்தை அடிப்படையாகக் கொண்டு விதிக்கப்பட்ட வரிகளில் மனைவரி, தோட்டவரி, மரவரி ஆகியவை இடம்பெற்றிருந்தன. இவற்றுள் மனைவரியானது. ஒவ்வொரு வீட்டிற்கும் அதன் தன்மைக்கேற்ப அறவிடப்பட்டு வந்தது. இது பத்துக் காசிற்கு மேற்படாது அறவிடப்பட்டு வந்தது. தோட்ட வரியானது வீட்டைச்சுற்றி நடப்பட்டிருந்த வாழை, கமுகு, மா, பலா, தென்னை முதலிய பயன் வழங்கக்கூடிய மரங்களை அடிப்படையாகக் கொண்டு அறவிடப்பட்டு வந்தது. மரவரியானது வேம்பு, இலுப்பை ஆகிய மரங்களை அடிப்படையாகக் கொண்டு அறவிடப்பட்டு வந்தது. இவ் வரியானது அவற்றிலிருந்து பெறப்படும் எண்ணெயை செலுத்துவதனூடாக பின்பற்றப்பட்டு வந்தது. இவ்வாறாக நிலத்தை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு வழிகளூடாக நிலவரி அறவிடப்பட்டு வந்தது.

**தலைவரி**

யாழ்ப்பாண இராச்சியத்தில் வாழ்ந்துவந்த குடிமக்களிடமிருந்து அறவிடப்பட்டு வந்த வரியாக இது காணப்பட்டது. இராச்சியத்தில் வாழ்ந்த பருவமடைந்த ஆண்கள், பெண்கள் ஆகிய இரு பாலரும் இவ்வரி செலுத்தக் கடமைப்பட்டவர்களாக இருந்தனர். இவ் வரியின் மூலம் ஆண்டொன்றிற்கு 120000 பணம் தலைவரியாகக் கிடைத்துவந்தது(பத்மநாதன்,2011,ப143).

**அதிகாரிவரி**

யாழ்ப்பாண அரசர்கள் தங்களது மாகாணங்களிற்குப் பொறுப்பாக நியமித்திருந்த அதிகாரிகளது பெயரால் அறவிடப்பட்டுவந்த வரியாக இது விளங்குகின்றது. அதாவது மாகாணங்களில் பணியாற்றிவந்த அதிகாரிகளுக்கு அரசு ஊதியம் வழங்காது அவர்களது வாழ்க்கைச் செலவிற்கு வேண்டியவற்றை குடியானவர்கள் பண்டங்களாகவும், பணமாகவும் செலுத்தும் ஓர் ஏற்பாடாக இது இருந்தது. இவ்வாறான வரியை பெறுவதன் மூலம் அதிகாரிகள் தமது நடவடிக்கைகளை தொடர்ந்து அப்பகுதிகளில் மேற்கொண்டு வந்தனர்(பத்மநாதன்,2011ப,143).

**இனவரி**

பல்வேறு தொழில்களை சாதியடிப்படையில் மேற்கொள்பவர்களிடமிருந்து அறவிடப்படும் வரியாக இது காணப்பட்டது. இதன்படி தச்சர், கொல்லர், கைக்கோளர், கன்னார், பொற்கொல்லர் முதலியோர் இவ்வரியைச் செலுத்தினர். இவ் வரியானது தனித்தனியாக ஒவ்வொருவரிடமிருந்து அறவிடப்படாது ஒவ்வொரு தொழிலை அடிப்படையாகக் கொண்ட சாதியினரிடையே மொத்தமாக தீர்மானிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டு வந்தது.

**சுங்கவரி**

யாழ்ப்பாண அரசு கடல் மார்க்கமான வர்த்தகத்தின் போது துறைமுகங்களில் சுங்கச்சாவடிகளை நிறுவியும் தரைமார்க்கமான வர்த்தகத்தின் போது கடவைகளில் சுங்கச்சாவடிகளை நிறுவியும் சுங்கவரிகளை அறவிட்டுவந்தது. இக் காலத்தில் கடல் மூலமான வர்த்தகத்தால் மன்னார், மாதோட்டம்,

அரிப்பு, பருத்தித்துறை, தொண்டைமானாறு, வல்வெட்டித்துறை, காங்கேசன்துறை, கச்சாய், கொழும்புத்துறை, ஊர்காவற்துறை, முல்லைத்தீவு ஆகிய துறைமுகங்கள் செல்வாக்குப்பெற்றுத் திகழ்ந்தன. காங்கேசன் துறை வெளிநாட்டு வர்த்தகத்திற்கு புகழ்பெற்றுத் திகழ்ந்தது. கொழும்புத்துறையானது குடாநாட்டிற்கும் வன்னிக்கும் இடையேயான வர்த்தகத்தால் புகழ்பெற்று விளங்கியது. இத்துறைமுகத்தில் சுங்கவரி அறவிடுதல் குத்தகையாக வழங்கப்பட்டது. குத்தகைதாரர் துறைமுக அதிகாரியாகவும் செயற்பட்டு வந்தார். இத்துறைமுகத்தினூடாக பயணங்களை மேற்கொள்பவரும் மீன்பிடியில் ஈடுபடுவோரும் கட்டணங்கள் செலுத்துவதனூடாகவே தமது நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுக்க முடிந்தது. இப்பகுதியினூடாக கொண்டுசெல்லப்படும் பொருட்கள் அனைத்தும் சுங்கத்துறையினரால் பரிசோதிக்கப்பட்ட பின்பே அங்கிருந்து கொண்டுசெல்ல முடியும். தனிநபர்கள் சுமந்துவரும் ஒவ்வொரு பொதிக்கும் அரை மரக்கால் சுங்கவரியாகச் செலுத்தப்பட்டு வந்தது. இவ்வாறான சுங்கவரி நடைமுறையானது அனைத்து துறைமுகப்பகுதிகளுக்கும் பொதுவானவையாகக் காணப்பட்டது.

தரைவழி வர்த்தக நடவடிக்கையின்போது கடவைகளில் சுங்கவரிகளை நிறுவி அப்பகுதியினூடாகக் கொண்டு செல்லப்படும் பொருட்கள் பரிசோதிக்கப்பட்டு வரி அறவிடப்பட்டு வந்தது. இவ்வாறான சுங்கவரி பச்சிலைப்பள்ளிக் கடவையில் நிறுவப்பட்டிருந்த சுங்கச்சாவடியில் அறவிடப்பட்டு வந்ததை அறியமுடிகின்றது. இவ்வழியினூடாக கொண்டுசெல்லப்படும் ஒரு கச்சை புடவைக்கும் 25 அங்கவஸ்திரங்களுக்கும் அரைப்பணம் வரியாக அறவிடப்பட்டு வந்தது. கண்டியில் இருந்து வன்னிவழியாக குடாநாட்டிற்கான தரைவழி வர்த்தகம் இடம் பெற்று வந்ததனால் கடவைகள் மூலமாக அரசு பெருமளவு வருமானத்தைப் பெற்று வந்தது. இப்பகுதியூடாக அபின், மஞ்சள், கராம்பு, மிளகு ஆகிய பொருட்களைக் கொண்டு வரும்போது 8 வீதம் வரியாக அறவிடப்பட்டு வந்தது. அதுபோல் வன்னியூடாகக் கொண்டுசெல்லும் பொருட்களில் ஒரு பொதி எருதின் பருத்திச் சுமைக்கு அரைப்பணமும் ஆறு எருதுகளின் சுமைப்பொதி வரகுக்கு ஒரு பணமும் வரியாகக் கொள்ளப்பட்டது. மேலும் பச்சிலைப்பள்ளி, எழுதுமட்டுவாள் போன்ற பகுதிகளின் மக்கள் பூநகரி, வன்னி ஆகிய பகுதிகளுக்குச் சென்று பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு அறுவடைகளை எடுத்துவரும்போது 10 முதல் 12 வரையான லாகம் தானியத்தை கடவுகளில் இறைகடமையாக வழங்கிவந்தனர். இவ்வாறு துறைமுகங்களிலும் கடவைகளிலும் சுங்கச்சாவடிகளை நிறுவி சுங்கவரிகளை அறவிட்டு வந்தனர்(Peris,1920,p.p1-18).

**விற்பனை வரி**

யாழ்ப்பாண அரசர்காலத்தில் விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் மீது விதிக்கப்பட்ட வரி விற்பனை வரி என அழைக்கப்பட்டது. அது துணி முதல் தானியங்கள்வரை அறவிடப்பட்டு வந்தது. இக்காலத்தில் துணிகள் விற்பனையாவதாக இருந்தால் அவை அரச முத்திரை பொறிக்கப்பட்டவையாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அவற்றை விற்பனை செய்ய முடியாததுடன் துறைமுகங்கள் வழியாகவோ கடவைகள் வழியாகவோ எடுத்துச்செல்ல முடியாது. இதனால் துணிகளுக்கு முத்திரையிடுவது அவசியமாக இருந்தது. இவ்வாறு முத்திரையிடும்போது குறிப்பிட்ட தொகை வரியாக அறவிடப்பட்டு வந்தது. இவ் வரி இலாஞ்சினைப்பேறு என அழைக்கப்பட்டு வந்தது. இதன்படி எட்டுச் சேலை, நான்கு கச்சை புடவை, 25 சால்வை ஆகியவற்றுள் ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு பணம் இலாஞ்சினைப் பேறாகப் பெறப்பட்டு வந்தது.

உணவு மற்றும் தானியம் ஆகியவற்றின் மீது அறவிடப்பட்டு வந்த விற்பனை வரியானது தரகு என அழைக்கப்பட்டு வந்தது. இது இறக்குமதியின்போதும் விற்பனையாகும் போதும் அறவிடப்பட்டு வந்தது. இதன்படி துறைமுகத்தை வந்தடையும் படகுகள் ஒவ்வொன்றும் ஒரு பணம் தரகாக செலுத்தி வந்தன. இக்காலத்தில் சந்தைகள் மற்றும் நகரங்களில் தானியங்கள் விற்பனை செய்யப்படும் போது அவற்றை கொள்வனவு செய்வோர் ஒவ்வொரு பணம் பெறுமதியான பொருளுக்கும் ஒவ்வொரு பிடி என்ற வகையில் தரகு செலுத்த வேண்டும். இவ்வாறான தரகு அறவிடும் பொருட்டு யாழ்ப்பாண அரசர்கள்

விற்பனை செய்யும் பொருட்களை பொது இடங்களில் அரச சேவகர் முன்னிலையில் விற்பனை செய்யவேண்டும் என்ற விதியை ஏற்படுத்தியிருந்தனா(பத்மநாதன்,1992,ப.129).

**வரி தவிர்ந்த அரச ஏகபோக உரிமை பெற்ற தொழில்கள் மூலம் பெற்றுவந்த வருமானங்கள்**

யாழ்ப்பாண அரசு காலத்தில் இராச்சியத்தின் அனைத்துப் பகுதிகளிலும் காணப்பட்ட இயற்கை வளங்கள் அரச உடமையாகக் காணப்பட்டதன் அடிப்படையில் அவ் இயற்கைவளங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் வர்த்தக நடவடிக்கைகள் அரசின் ஏகபோக உரிமை பெற்றவையாகக் காணப்பட்டன. யாழ்ப்பாண இராச்சியத்தைப் பொறுத்தவரை அதன் இயற்கை வளங்களாக கடல், காடு ஆகியவை காணப்பட்டன. இவற்றிலிருந்து கிடைக்கும் பொறுமதியான பொருள்கள் வரிசையில் காட்டிலிருந்து சாயவேர், யானைகள், பெறுமதியான மரங்கள் ஆகியவையும் கடலிலிருந்து பெறப்படும் முத்து, சிப்பி,சங்கு, உப்பு ஆகியவையும் அவற்றை அடிப்படையாகக் கொண்ட வர்த்தகமும் அரசின் கீழே மேற்கொள்ளப்பட்டு வந்தது. இவ் வர்த்தகத்தின் மூலம் அரசு பெரும் வருவாயையும் பெற்றுவந்தது குறிப்பிடத்தக்கது.

**முத்து வர்த்தகம்**

யாழ்ப்பாண இராச்சியத்தைப் பொறுத்தவரை கடல் வளத்திலிருந்து கிடைத்த வளங்களில் முக்கியம்வாய்ந்ததாக முத்துக்கள் திகழ்ந்தன. யாழ்ப்பாண அரசர் காலத்தில் இடம்பெற்றுவந்த முத்து வர்த்தகத்திற்கான முத்துக்கள் மன்னார்க் கடலில் இருந்தே பெறப்பட்டு வந்தன. இம் முத்துக்கள் சர்வதேசவர்த்தகத்தில் முக்கியஇடம் பெற்றிருந்ததுடன் இவ் வர்த்தகத்தின் மூலம் ஆரியச்சக்கரவர்த்திகள் பெருமளவு வருமானத்தையும் பெற்றுவந்தனர்(முத்துத்தம்பிப்பிள்ளை, 1915). இதனால் முத்துவர்த்தகமானது அரசின் ஏகபோக உரிமைபெற்ற வர்த்தகமாக இக்காலத்தில் காணப்பட்டது. 14 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இலங்கைக்கு வருகைதந்த ஜோர்தான்ஸ் எனும் வெனீசிய நாட்டைச்சேர்ந்த பாதிரியார் 8000 படகுகள் மன்னார்க் கடலிலே முத்துக்குளிப்பில் ஈடுபட்டதாகக் குறிப்பிடுகின்றார். இவுன்பதுதா எனும் யாத்திரிகன் இலங்கைக்கு வருகைதந்த சமயத்தில் ஆரியச்சக்கரவர்த்தி ஒருவன் முத்துச்சலாபத்திற்கு சமீபமாக தங்கியிருந்து அதனை மேற்பார்வை செய்துவந்ததாக குறிப்பிட்டுள்ளார்(இராசநாயகம்.1933). அக்காலத்தில் மன்னார்க் குடாவில் இருந்து பெறப்பட்ட முத்துக்கள் உலகின் பல்வேறு நாடுகளிலிருந்துவந்த வணிகர்களால் வாங்கிச்செல்லப்பட்டது.

முத்துக்குளிப்பானது சித்திரை, வைகாசி, ஆகிய மாதங்களில் நடைபெற்றுவந்தது. அக்காலங்களில் அரசன் அப்பகுதியின் பாதுகாப்பை பலப்படுத்திவைப்பதுடன் முத்துக்குளிப்போர், வியாபாரிகள், அரசஅதிகாரிகள் ஆகியோர் அப்பகுதிகளில் தங்கியிருந்து தமது நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளையும் செய்துவந்தான். முத்துக்குளிப்பின்போது பெறப்பட்ட முத்துக்களில் அரைப்பங்கு அரசனுக்குரியதாகும் மிகுதியை தோணிகளில் செல்வோர் தமக்கிடையே பகிர்ந்துகொள்வர். அவர்கள் தமது முத்துக்களை வணிகர்களுக்கு விற்பனை செய்துவிட்டு தமக்குத்தேவையான உணவுப்பொருட்களையும், புடவைகளையும் பெற்றுக்கொள்வர். முத்துக்குளிப்புக் காலத்திலே மாதோட்டத்தில் சனப்புழக்கமும், பண்டமாற்றும் கணிசமான அளவில் ஏற்படுவருவது குறிப்பிடத்தக்கது. முத்துக்களை கொள்வனவு செய்யும் வணிகர்கள் அவற்றை தென்னிந்தியத் துறைமுகப் பட்டணங்களுக்கு எடுத்துச் சென்று விற்பனைசெய்து வந்தனர். முத்துக்குளிப்புடன் தொடர்பான சந்தைகளில் விற்பனையாகிய பொருள்கள் மீதும் அரசு வரி அறவிட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண இராச்சியத்தில் கடலில் இருந்து பெறப்பட்ட முத்தை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்பட் வர்த்தகம் தவிர மீன்பிடி, கருவாடு பதனிடல், சங்கு பிடித்தல், உப்பு உற்பத்திசெய்தல் ஆகிய பல தொழில்கள் மூலமும் வருமானம் பெறப்பட்டு வந்தது(பத்மநாதன்,2011,ப.ப154-156). இத் தொழில்களை யாழ்ப்பாண இராச்சியத்தின் கரையோரப் பகுதிகளில் வாழ்ந்துவந்த மக்கள் மேற்கொண்டுவந்ததுடன் இவர்கள் யாழ்ப்பாண சமூகத்தில் இருந்த சாதிக்கட்டமைப்பில் தனிப்பிரிவினராகக் கணிக்கப்பட்டு வந்தனர். யாழ்ப்பாண இராச்சியத்தில் உற்பத்தியான உப்பிற்கு பெருவரவேற்பு

கிடைத்திருந்தமை தொடர்பாக யாழ்ப்பாண வைபவமாலை பல தகவல்களை தெரிவிப்பது குறிப்பிடத்தக்கது(குலசபாநாதன்,1949). இவ்வாறு கடல் தொழிலில் ஈடுபட்டுவந்த மக்கள் கடலுக்குச் சென்று பெற்றுவந்த கடல் திரவியங்கள் யாழ்ப்பாண இராச்சியத்தின் பொருளாதார வளத்திற்கு உறுதுணையாக விளங்கிவந்தது குறிப்பிடத்தக்கது.

**யானை வர்த்தகம்**

யாழ்ப்பாண அரசர் காலத்தில் அரசுக்கு வருமானம் கிடைக்கும் மற்றொரு இயற்கை வளமாகக் காடுகளில் இருந்து பிடிக்கப்படும் யானைகள், பெறுமதிவாய்ந்த மரங்கள் ஆகியவை விளங்கின. இயற்கை வளமான காடுகள் அரச உடமைகளாகக் காணப்பட்டதனால் காட்டிலிருந்து பெறப்படும் யானை மற்றும் மரங்கள் விற்பனை அரசின் ஏகபோக உரிமைபெற்றவையாகக் காணப்பட்டன. யாழ்ப்பாண இராச்சியத்தைப் பொறுத்தவரை வன்னிப்பகுதியில் யானைகள் பெருமளவில் காணப்பட்டதனால் வன்னிப்பற்றுக்களை ஆட்சிபுரிந்த ஆட்சியாளர்கள் அங்குள்ள யானைகளைப் பிடித்து அரசருக்குத் திறையாகக் கொடுத்துவந்தனர்(குணசிங்கம்,2008,ப.200). வன்னிப்பகுதியிலிருந்து குடாநாட்டிற்கு யானைகளைக் கொண்டுவரும் பகுதியே ஆனையிறவு என்ற பெயரால் வழங்கிவந்தமையும் குறிப்பிடத்தக்கது.

வன்னியிலிருந்து கொண்டுவரப்பட்ட யானைகளை யாழ்ப்பாண அரசர்கள் தமது அரசியல் தேவைகளுக்கு பயன்படுத்திவந்ததுடன் தென்இந்தியாவிற்கும் ஏற்றுமதி செய்துவந்தனர். அவ் யானைகளை விஜயநகரத்து ராய்கள், தில்லி சுல்தான்கள், வங்காளத்து நவாபுகள், பாமினி சுல்தான்கள், ஆகியோர் கொள்வனவு செய்து வந்தனர். சோழமண்டலக் கரையிலிருந்தும் வங்காளத்திலிருந்தும் வருகைதரும் வணிகர்கள் யானைகளைக் கொள்வனவு செய்து சென்றனர். அவர்கள் யாழ்ப்பாணம் வரும்போது நெல், அரிசி, ஆகியவற்றை கப்பல்களில் ஏற்றிவந்து வழங்கும் முறையைப் பின்பற்றிவந்தனர்(பத்மநாதன், 2011,ப.153).

**சாயவேர் மற்றும் சாய உற்பத்தி**

யாழ்ப்பாண அரசர் காலத்தில் சாயவேர் உற்பத்தி ஏற்றுமதிப் பொருளாகக் காணப்பட்டதுடன் அரசின் ஏகபோக உரிமை பெற்ற தொழிலாகவும் காணப்பட்டது. இக்காலத்தில் சாயவேர் பெருமளவில் தென்னிந்தியாவிற்கு ஏற்றுமதியாகி வந்தமை குறிப்பிடத்தக்கது. சாயவேருடன் சம்மந்தப்பட்ட சாயம் காச்சுதல் குடிசைக்கைத்தொழிலாக அக்காலத்தில் விருத்திபெற்றிருந்தது. சாயவேர் உற்பத்தியானது யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் காரைதீவு முதலான தீவுகளிலும் மன்னாரிலும் பெருமளவில் மேற்கொள்ளப்பட்டுவந்தது. சாயவேரை சேகரிப்பதற்கென அரசு ஊழியர்களை நியமித்திருந்ததுடன் அவர்களைக்கொண்டு அதனைக் காய்ச்சிப் பதப்படுத்தி சாயக்கட்டிகளாக விற்பனை செய்துவந்தது. இச்சாயக்கட்டிகள் பச்சை, சிவப்பு, நீலநிறங்களில் காணப்பட்டதுடன் அவை துணிகளுக்கு சாயமூட்டுவதற்கும் பயன்படுத்தப்பட்டு வந்தன(குணசிங்கம்,ப.202).

**முடிவுரை**

யாழ்ப்பாண அரசைப் பொறுத்தவரை அது தோற்றம் பெற்றது முதல் வீழ்ச்சியடையும்வரை பொருளாதாரரீதியில் பல்வேறு வழிகளூடாக வருமானத்தைப் பெற்று எழுச்சிமிக்க அரசாக விளங்கியிருந்தது. குறிப்பிட்டுக் கூறுவதாயின் அது பணப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட அரசு என்று அடையாளம் காணும்வகையில் இடைக்கால இலங்கை வரலாற்றில் எழுச்சி பெற்றுத்திகழ்ந்திருந்தது. இதனை யாழ்ப்பாண அரசர்கள் வெளியிட்டிருந்த தங்கம், வெள்ளி, செப்பு ஆகிய உலோகங்களாலான நாணயங்கள் மூலம் அறியமுடிகின்றது. இவ்வாறான எழுச்சிக்கு யாழ்ப்பாண அரசர்கள் பின்பற்றிய பொருளாதாரக் கொள்கைகள் அதிலும் குறிப்பாக அவர்கள் அறிமுகப்படுத்தியிருந்த வரிமுறைகள் முக்கிய பங்களிப்பாற்றியுள்ளன என்றால் அது மிகையாகாது.

**உசாத்துணை நூல்கள்**


1. இந்திரபாலா, க,*இலங்கையில் தமிழர் ஓர் இனக்குழு ஆக்கம் பெற்ற வரலாறு*. கொழும்பு-சென்னை: குமரன்புத்தக இல்லம்,2006.
2. இராசநாயகம்,செ.*யாழ்ப்பாணச் சரித்திரம்.* யாழ்ப்பாணம்,1933.
3. இந்திரபாலா,கா.(1972).*யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம்.* வட்டுக்கோட்டை, இலங்கை: யாழ்ப்பாணத் தொல்பொருளியற் கழகம்,1972.
4. கிருஷ்ணராசா, செ,*இலங்கைப் பண்பாட்டுப் பரிணாமத்தின் அடிப்படைகள்*.கொழும்பு: எபி கிறியேசன்,2012.
5. குணசிங்கம்,மு,*இலங்கையில் தமிழர் ஒரு முழுமையான வரலாறு*. ஆஸ்திரேலியா: எம்.வி. வெளியீடு,2008.
6. சபாநாதன்,கு,*யாழ்ப்பாண வைபவமாலை.*சுன்னாகம்: திருமகள் அச்சகம்,1949.
7. சிற்றம்பலம்,சி.க,*யாழ்ப்பாண இராச்சியம்*, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி,1992.
8. சுவாமி ஞானப்பிரகாசர், *யாழ்ப்பாண வைபவ விமர்சனம்.*அச்சுவேலி: ஞானப்பிரகாச யந்திரசாலை,1928.
9. பத்மநாதன், சி,.*யாழ்ப்பாண இராச்சியம் ஒரு சுருக்க வரலாறு*.கொழும்பு: குமரன் புத்தக இல்லம்,2011.
10. பத்மநாதன், சி, *இலங்கைத் தமிழர் தேசவளமைகளும் சமூகவழமைகளும்*.கொழும்பு- சென்னை: குமரன் பதிப்பகம், 2001.
11. புஷ்பரட்ணம், ப,*தொல்லியல் நோக்கில் இலங்கைத்தமிழர் பண்பாடு*.யாழ்ப்பாணம்: பவானி பதிப்பகம்,2000.
12. முத்துத்தம்பிப்பிள்ளை,ஆ,*யாழ்ப்பாணச் சரித்திரம். யாழ்ப்பாணம்*: நாவலர் பதிப்பகம்,1915.
13. Abeyasinghe, Tikiri. Jaffna under the Portuguese. Colombo: Lake House Investments Ltd.1986.
14. Pathmanathan,S, *The Kingdom of Jaffna*. Colombo,1978.
15. Gueyroz,Fernao De, *The temporal and spiritual conquest of Ceylon*, Translated by Fr.S.G.Prerera,Colombo,1930.